# கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் புதிய ஊடகக் கலாச்சாரம

## சுருக்க வெளியீடு

**டிசம்பர் 2021**



HELVETAS SRI LANKA SDJF 25 ipid Institute for Participatory Interaction in Development
Leading in Participatory Development

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் புதிய ஊடகக் கலாச்சாரம்

சுருக்க வெளியீடு


டிசம்பர் 2021

பொறுப்புத் துறப்பு

இந்த வெளியீடு ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஆதரவுடன் உருவாக்கப்பட்டதாகும். இதன் உள்ளடக்கங்களின் முழுமையான பொறுப்பு HELVETAS நிறுவனத்தை சார்ந்தது என்பதுடன் அவை ஐரோப்பிய ஒன்றியத்தின் கருத்துக்களை பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

## நிறைவேற்றுச் சுருக்கம்

கடந்த தசாப்தத்தில் சமூக ஊடக இயங்கு தளங்கள் மற்றும் புதிய ஊடகங்கள் என்பன அடைந்த பிரசித்தத்தின் ஊடாக இலங்கையின் டிஜிட்டல் ஊடக புறத்தோற்றத்தில் துரிதமான வளர்ச்சி ஒன்றை காண முடிகின்றது[1]. கொவிட்-19 பெருந்தொற்று உலகளாவிய ரீதியில் டிஜிட்டல் புறத் தோற்ற வடிவத்தை பெருப்பித்துள்ளது. இப்பெருந்தொற்றின் போது சமூக ஊடகங்களில் உயர் ஈடுபாடு, தூர இடங்களில் இருந்து பணிபுரியும் நிலை மாற்றங்கள், அத்துடன் "பழைய ஊடகங்களுக்கு" பதிலாக டிஜிட்டல் ஊடகங்களின் நுகர்வு பல அடுக்குகளில் அதிகரித்தமை என்பன இதன் போது ஏற்பட்டன. HELVETAS Intercooperation gGmbH நிறுவனம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் தகவல் உரிமை மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் என்பவற்றை மேம்படுத்துவதற்கான வளர்ச்சித் தளம் (Incubator Space for Promoting Information Right and Freedom of Expression / InSPIRE) என்ற திட்டத்தை இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் (SDJF) நிறுவனத்தின் பங்காண்மையுடன் அமுல்படுத்தி வருகின்றது. இந்த திட்டத்தின் கீழ் இலங்கையில் நிலவும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் புதிய ஊடகக் கலாச்சாரம் தொடர்பில் முழுமையான ஆய்வு ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.



படம் 1: பங்குபற்றுனர்கள் பற்றிய பொதுவான தகவல்கள்

இலங்கையில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் புதிய ஊடகக் கலாச்சாரம் என்ற தலைப்பில் நடத்தப் பட்ட இந்த ஆய்வின் ஒட்டு மொத்த நோக்கமாக இலங்கையில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை மேம்படுத்த புதிய ஊடகங்களின் பயன்பாடு மற்றும் புதிய ஊடகங்களின் புறத்தோற்ற வடிவம் (கலாச்சாரம்) என்பன தொடர்பான முழுமையான புரிதல் ஒன்றைப் பெறுவதாக அமைந்திருந்தது. இலங்கையில் புதிய ஊடக தோற்ற வடிவத்தை மதிப்பிடுவதில் இந்த ஆய்வானது ஊடகத்துறையின் பிரதான செயற்பாட்டாளர்கள் மற்றும் அக்கறை கொண்டோர், புதிய ஊடக நிறுவனங்களின் பிரதான நுகர்வோர், பயனர் நடத்தை போக்குகள் அத்துடன் புதிய ஊடகத்தில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தின் ஒட்டு மொத்த சூழல் போனற விடயங்களில் ஆழ்ந்த அறிவைப் பெற்றுக்கொண்டது.

நாடளாவிய ரீதியில் (அனைத்து 9 மாகாணங்களிலும்) பங்கேற்பு இடையீடு மற்றும் அபவிருத்தி நிலையத்தினால் (Institute for Participatory Interaction and Development (IPID)) நடத்தப்பட்ட இந்த ஆய்வில் 15 – 29 வயதுப் பிரிவில் உள்ள இளைஞர்கள் பயன்படுத்தும் புதிய ஊடகங்கள் தொடர்பில் தனித்துவம் மிக்க கவனம் செலுத்தப்பட்டது. மேலும், செல்வாக்கு செலுத்தும் வயதுப் பிரிவில் (40 தொடக்கம் 68 வயது கொண்டோர்) தெரிவு செய்யப்பட்ட பெற்றோரிடம் தகவல் சேகரிப்பு வினாக்கொத்து ஒன்று வழங்கப்பட்டு தகவல் சேகரிக்கப்பட்டது. இக்குழுவில் உள்ளடங்கியோர் 15 தொடக்கம் 19 வரையான வயதுப் பிரிவில் உள்ளடக்கப்பட்ட இளைஞர்களின் பெற்றோராக அமைந்திருந்தனர். இலங்கையின் புதிய ஊடகம் தொடர்பில் பெற்றோர் கொண்டிருந்த மேலதிக கண்ணோட்டங்கள், தமது பிள்ளைகளின் புதிய ஊடகப் பாவனை மற்றும் நடத்தைகள் மற்றும் அப்பெற்றோரின் புதிய ஊடகங்களுடனான ஈடுபாடு தொடர்பான பகுப்பாய்வினைப் பெறும் நோக்கிலேயே இவ்வினாக்கொத்து மூலமான தகவல் சேகரிப்பு நடத்தப்பட்டது. இதற்கும் அப்பால், இலங்கையில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் தொடர்பில் காணப்படும் சட்டத்தின் சட்டக வடிவமைப்பு தொடர்பான பகுப்பாய்வு ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு ஜூலை 2021 தொடக்கம் டிசம்பர் 2021 வரையான காலப்பகுதியில் இடம்பெற்றது. எனவே, இவ்வாய்வின் மூலம் பெறப்பட்ட கண்டறிதல்கள் ஜூலை 2021 தொடக்கம் டிசம்பர் 2012 வரையான காலப்பகுதிக்குரிய விடயங்களை மாத்திரமே உள்ளடக்குகின்றன.

---


[1] Selvarajah Thuseethan & Shanmuganatha Vasanthapriyan (2015) Social Media as a New Trend in Sri Lankan Digital Journalism: A Surveillance

ஒட்டுமொத்தமாக 1365 வினாக்கொத்துக்கள் தகவல் சேகரிப்புக்காக பகிர்ந்தளிக்கப்பட்டன. IPID அமைப்பு தகவல் சேகரிப்பு இடம்பெறும் மாவட்டம் ஒவ்வொன்றிலும் பிரதேச செயலாளர் பிரிவுகளை (DSDs) நோக்கத்துடன் தெரிவு செய்திருந்ததுடன் பிரதேச செயலாளர் பிரிவு ஒன்றுக்கு ஒதுக்கப்பட்ட மாதிரிகளின் ஆகக் குறைந்த எண்ணிக்கை 15 ஆக அமைந்திருந்தது. ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு மற்றும் இரத்தினபுரி மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் முன்மொழியப்பட்டிருந்த மாதிரிகளின் 100% இனையும் IPID அமைப்பினால் சென்றடைய முடியுமாக இருந்தது. கொவிட்-19 பெருந்தொற்று பரவல் காரணமாக அரசாங்கத்தினால் சில பிரதேச செயலாளர் பிரிவுகளில் குறிப்பாக அறிவிக்கப்பட்ட பயணத்தடைகள் காரணமாக அவ்விடங்களை சென்றடைய இயலாமல் இருந்தமை இதற்குரிய காரணமாக அமைகின்றது.

## இந்த ஆய்வின் பிரதான கண்டறிதல்கள்

### *இலங்கையில் இணையப் பயன்பாடு*

இணையப் பயன்பாடு பற்றிக் கேட்டபோது, பிரதான தகவல் சேகரிப்பு மாதிரிகளில் உள்ளடங்கியிருந்த 15 தொடக்கம் 29 வரையான வயதுப் பிரிவில் உள்ளவர்களில் 96% ஆனவர்கள் தாம் இணையத்தை பயன்படுத்துவதாக பதிலளித்த அதேவேளை செல்வாக்கு செலுத்தும் வயதுப் பிரிவில் உள்ளோரில் 65% ஆனவர்கள் இணையத்தை பயன்படுத்துவதாக பதிலளித்தனர். மேலும், 15 – 29 வயதுப்பிரிவில் உள்ளோரில் 65.6% ஆனவர்கள் "நாளொன்றில் பல தடவைகள் பயன்படுத்துவதாகவும், 13.1% ஆனவர்கள் "நாளொன்றில் ஒரு தடவை" பயன்படுத்துவதாகவும் 18.3% ஆனவர்கள் "வாரத்தில் 2 தொடக்கம் 3 தடவைகள்" பயன்படுத்துவதாகவும் தெரிவித்தனர்.





படம் 2: எந்த கால இடைவெளிகளில் நீங்கள் இணையத்தை பயன்படுத்துகின்றீர்கள் (15-29 வயதுக்குழு)?

எனவே, 15 – 29 வயதுக் குழுவில் உள்ள குறிப்படத்தக்க பெரும்பான்மையானோர் (78.7%) நாளாந்தம் இணையத்தை பயன்படுத்துகின்றனர் எனக் குறிப்பிடுவதால் அவர்களை செயற்படு நிலை மிக்க இணையப் பாவனையாளர்கள் என கருத்திற் கொள்ளலாம். இலங்கையில் புதிய ஊடகத்தின் புற உருத்தோற்றத்தை வரைபடமாக்கலில், இலங்கையின் இளைஞர்கள் (15 தொடக்கம் 29 வயது கொண்டோர்) இணையம் மற்றும் புதிய ஊடகத்தில் உயர் ஈடுபாட்டை கொண்டுள்ளதை எடுத்துக் காட்டுகின்ற அதே வேளை நாட்டில் இணையப் பாவனையாளர்களின் டிஜிட்டல் பிரசன்னம் குறிப்பிடத்தக்க அளவில் இயங்கு நிலையில் காணப்படுவதையும் வெளிப்படுத்துகின்றது.

இணையத்துக்கான அணுகலைக் கருத்திற் கொள்ளும் வேளை, 69.4% இளைஞர்கள் இணையத்தை தமது சொந்த ஸ்மார்ட் போன் ரக கையடக்க தொலைபேசியை பயன்படுத்தி அணுகுவதுடன் 26.95% ஆனோர் தமது ஸ்மார்ட் போன் ரக கையடக்க தொலைபேசியை இன்னொருவருடன் பகிர்ந்து கொள்கின்றனர்.


இணையத்துடனான ஆரம்ப பரிச்சியத்தை கருத்திற் கொள்ளும் வேளை, இணையத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தாமாகவே கற்றுக்கொண்டதாக 78.5% ஆனோர் தெரிவிக்கின்ற அதே வேளை, உள்ளடக்கங்களை அணுகுதல் மற்றும் இணையத்துடன் ஈடுபாடு கொள்ளல் என்பவற்றைக் கருதும் வேளை,

64.5% ஆனோர் வெளிப்புற செல்வாக்குகள் எவையுமின்றி எப்போதும் இணையத்தை தாமாகவே அணுகுவதாக தெரிவிக்கின்றனர்.




படம் 3: அதிகம் பயன்படுத்தப்படும் சமூக ஊடக இயங்குதளங்கள்

இணையத்தில் ஈடுபாடு கொள்ளும் வேளை தனி நபர்க் எந்தளவு பாதுகாப்பு அல்லது அதிகாரம் மிக்கவர்களாக உள்ளனர் என்பதை அறிவது முக்கியமாக விடயமாகக் காணப்படும் நிலையில் இங்கு கண்டறியப்பட்ட விடயங்கள் இணையத்தில் இளைஞர்கள் தம்மை வெளிப்படுத்துவதில் அல்லது வெளிப்படைத் தன்மையாக நடந்து கொள்வதற்கு இளைஞர்கள் காண்பிக்கும் விருப்பு தொடர்பான பெறுமதி மிக்க ஆழ்ந்த அறிவினை இவ்விடயம் வழங்குகின்றது.





படம் 4: எவ்வளவு கால இடைவெளிகளில் நீங்கள் சமூக ஊடக இயங்குதளங்களை பயன்படுத்துகின்றீர்கள் (15 – 29 வயது)?

இணையத்தை பயன்படுத்துவதன் நோக்கங்கள் பற்றி கருத்திற்கொள்ளும் வேளை, 15 – 29 வயதுக்குழுவைச் சேர்ந்த பெரும்பான்மையான பதில் வழங்குனர்கள் (55.6%) சமூக ஊடக இயங்குதளங்களை அணுகுவதற்காக இணையத்தை பயன்படுத்துவதாக குறிப்பிட்டனர். அவர்களில், 32.1% தாம் நாளாந்தம் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதாக தெரிவித்த அதே வேளை 23.5% தாம் சமூக ஊடகத்தை "நாளொன்றில் 1 தடவைக்கு மேல் பயன்படுத்துவதாக தெரிவித்தனர். பயன்படுத்தப்படும் சமூக ஊடக இயங்குதளங்கள் தொடர்பில் வினவப்பட்ட வேளை, 15 – 29 வயதுக்குழுவினர் மற்றும் செல்வாக்கு செலுத்தும் குழு ஆகிய இரண்டு தரப்புகளையும் சேர்ந்தவர்களில் அநேகமானோர் பேஸ்புக், வட்ஸ்அப் மற்றும் யூ டியூப் ஆகிய தளங்களைப் பயன்படுத்தியதாக தெரிவித்தனர். 15 – 19 வயதுக் குழுவினர் பரந்த வரிசை ஒன்றில் அமைந்த சமூக ஊடக இயங்குதளங்களைப் பயன்படுத்துவதாக தெரிவித்தனர், அவையானவ: இன்ஸ்டாகிராம், டிக்டொக், ஸ்னாப் சட் மற்றும் வைபர்.


***இணையம் மற்றும் இணையத்துக்கு வெளியே கருத்துக்களை வெளிப்படுத்தல்***

ஊழல் சம்பவம் பால்நிலை அடிப்படையில் அமைந்த வன்முறை அல்லது தொந்தரவு போன்ற தனித்துவம் மிக்க கற்பனைச் சூழ்நிலைகளை பதில் வழங்குனர்களுக்கு வழங்கி அவற்றை எவ்வாறு அறிக்கையிடுவர் என வினவப்பட்ட வேளை, உயர் பெரும்பான்மை பதில் வழங்குனர்கள் தாம் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதை தெரிவு செய்தனர். எவ்வாறாயினும், ஊடகங்களுக்கு இது தொடர்பில் அறிக்கையிடுவோம் எனக் கூறியோரில் பெரும்பாலோனோர் அதனை சமூக ஊடகத்தை பயன்படுத்தியே மேற்கொள்வோம் எனத் தெரிவித்தனர். தமது வீதி உடைந்திருப்பின் அதனை சமூக ஊடகத்தில் அறிக்கையிடுவோம் என 83.1% ஆனவர்களும் ஊழல் சம்பவங்களை அறிக்கையிட சமூக ஊடகங்களை பயன்படுத்துவோம் என 85.9% ஆனவர்களும் பால்நிலை அடிப்படையில் அமைந்த வன்முறையினை அறிக்கையிட சமூக ஊடகத்தை பயன்படுத்துவோம் என 86.2% ஆனவர்களும் தொந்தரவு, சித்திரவதை அல்லது இறப்பு போன்ற விடயங்களை அறிக்கையிட 87% ஆனவர்கள் சமூக ஊடகத்தை பயன்படுத்துவோம் எனவும் தெரிவித்தனர்.




படம் 5: இந்த சம்பவங்களை ஊடகங்களில் அறிக்கையிடுவதை நீங்கள் தெரிவு செய்வீர்களா? அவ்வாறாயின், அதனை மேற்கொள்ள சமூக ஊடகத்தை நீங்கள் தெரிவு செய்வீர்களா?

## *இணையத்தில் கருத்துக்களை வெளிப்படுத்தல்: பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள்*




படம் 6: சமூக ஊடகங்களில் பதில் வழங்குனர்கள் தம்மை வெளிப்படுத்தும் வேளை எந்தளவு பாதுகாப்பாக உணருகின்றனர

சமூக ஊடகங்களில் தமது கருத்துக்களை வெளியிடும் வேளை எந்தளவு பாதுகாப்பாக உணர்கின்றனர் என வினவப்பட்ட வேளை, வழங்கப்பட்ட பதில்கள் கலவையானவையாக அமைந்திருந்தன. 33.9% ஆனவர்கள் ''அநேகமாக பாதுகாப்பாக'' உணர்வதாகக் கூறிதுடன் 30.5% ஆனவர்கள் ''நடுநிலை'' எனப் பதிலளித்தனர். 21.1% ஆனவர்கள் ''எச்சரிக்கையாக'' இருப்பதாகக் கூறிதுடன் 11.7% ஆனவர்கள் ''எந்த வித பாதுகாப்பும் இல்லை'' எனக் கூறியதுடன் 2.9% ஆனவர்கள் மாத்திரமே ''மிகவும் பாதுகாப்பாக'' உணர்வதாகக் குறிப்பிட்டனர். தமது நம்பிக்கைகள் மற்றும் கருத்துக்களை சமூக ஊடகங்களில் வெளியிடுவதில் உறுதியான தயக்கு உணர்வொன்று இளைஞர்கள் இடையே காணப்படுவதை இந்த அடைவுகள் எமக்கு சுட்டிக்காட்டுகின்றன. இலங்கையில் உள்ள இணையப் பாவனையாளர்கள் தமது கருத்துக்களை வெளியிடும் வேளை தமது பாதுகாப்பு தொடர்பில் பயம் ஒன்று நிலவுவதை இது எமக்கு சுட்டிக்காட்டுகின்றது.


## *இணையத்தில் கருத்துக்களை வெளியிடல்: துல்லியத்தன்மை*

வெளிப்படுத்தல் சுதந்திரம் தொடர்பாக வழங்கப்பட்ட தனித்துவம் மிக்க கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் தரவரிசைப்படுத்துமாறு பங்கேற்பாளர்களிடம் கேட்கப்பட்ட வேளை, சமூக ஊடகங்கள் மக்கள் தமது கருத்துக்களை சுதந்திரமாக தெரிவிக்க அனுமதிக்கின்றன என்பது தொடர்பில் நடுநிலை, அல்லது நேர்மறையான பதில்களை வழங்கினர். மேலும், நிஜ வாழ்வை விட சமூக ஊடகத்தில் தம்மை வெளிப்படுத்துவது இலகுவானதாக அமையும் என்ற கூற்றுக்கு பெரும்பான்மையான பதில் வழங்குனர்க் ''ஏற்றுக்கொள்கிறேன்'' அல்லது ''உறுதியாக ஏற்றுக்கொள்கிறேன்'' என்ற விடையைத் தெரிவு செய்தனர். இது நிஜ வாழ்க்கை மற்றும் டிஜிட்டல் வாழ்க்கை என்பவற்றின் இடையான இரட்டைத்தன்மையினைக் காண்பிக்கின்றது. பௌதீக ரீதியில் ஒருவர் தன்னை வெளிப்படுத்துவதை விட டிஜிட்டல் சூழமைவு ஒன்றில் தன்னை வெளிப்படுத்து பாதுகாப்பானது உணர்கின்றமையானது அங்கு உயர் அளவில் வெளிப்படுத்தல் சுதந்திரம் நிலவுவதை எடுத்துக்காட்டுகின்றது. எவ்வாறாயினும், சமூக ஊடகத்தில் அந்தரங்கமான சுயவிபர தோற்ற வடிவம் ஒன்று தேவைப்படுவதை குறிப்பிடத்தக்க சதவீதமானவர்கள் சுட்டிக்காட்டினர், இது ஒருவரின் நோக்குகளை வெளிப்படுத்துவதில் முழுமையான வெளிப்படைத்தன்மை காணப்படா நிலையை பிரதிபலிக்கின்றது.

## *புதிய ஊடகத்தில் கொவிட்-19 தொடர்பான தகவல்களை பெறுதலும் பகிர்தலும்*

கொவிட்-19 பற்றிய தகவல்கள் தொடர்பில், தாம் சமூக ஊடகங்களின் ஊடாக தகவல்களைப் பெறுவதாக உயர் சதவீதமான பதில் வழங்குநனர்கள் (61.8%) தெரிவித்தனர். கொவிட்-19 உடன் தொடர்பா வேறுபட்ட விடயங்களில் தகவல்களைப் பெறுவோரி சதவீதங்களை நோக்கும் வேளை, தடுப்பூசி செயன்முறை (73.9%), பயணத் தடைகள் (71.5%), உலகளாவிய கொவிட்-19 நிலைமைகள் (61.9%) அத்துடன் சுகாதாரம் தொடர்பான தகவல்கள் (61.3%) என்றவாறு தகவல் பெறும் சதவீதங்கள் அமைந்திருந்தன. கொவிட்-19

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் உலகை மிகவும் பாதித்த விடயமாகக் காணப்படும் நிலையில், கொவிட்-19 தொடர்பில் தகவல்களைப் பெறுவதற்கு உயர் சதவீதமான மக்கள் சமூக ஊடகத்தில் தங்கியிருந்தமை டிஜிட்டல் உலகில் தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் இலகுவான அணுகல் என்பவற்றில் மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ளதை சுட்டிக்காட்டுகின்றது.




படம் 7: கொவிட்-19 பற்றிய தகவல்களைப் பெற சமூக ஊடகங்களைப் பயன்படுத்தல்

## கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் தொடர்பான சட்டத்தின் சட்டக வடிவமைப்பில் காணப்படும் இடைவெளிகள்

இலங்கையின் சூழமைவைக் கருத்திற் கொள்ளும் வேளை, இலங்கையின் அரசியலமைப்பின் உறுப்புரை 14(1) இல் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் காணப்படுகின்றது. "வெளியீடு உள்ளடங்கலாக பேச்சு மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரங்களுக்கு ஒவ்வொரு குடிமனும் உரித்துடையவர்கள்[2]" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இன மற்றும் மத ஒற்றுமைநலன்கள், பாராளுமன்ற சிறப்புரிமை, நீதிமன்றத்தை அமதித்தல், அவதூறு மற்றும் குற்றம் ஒன்றைத் தூண்டுதல் என்பன தொடர்பில் இந்த உரிமைக்கு சில கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ள. அடிப்படைச் சுதந்திரங்கள் மீதான மட்டுப்பாடுகள் தொடர்பில் இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 15(2) இல் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது:

> *14 (1) (அ) ஆம் உறுப்புரையினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமையின் பிரயோகமும் தொழிற்பாடும், இனச் சுமுகவாழ்வு, மதச் சுமுகவாழ்வு, என்பவற்றின் நலன் கருதியோ அல்லது பாராளுமன்ற சிறப்புரிமை, நீதிமன்ற அவமதிப்பு, மான நட்டம் அல்லது தவறுபுரியத் தூண்டுதல் என்பன தொடர்பாகவோ சட்டத்தினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தனவாதல் வேண்டும்.*[3]

மேலும், வெளிப்படுத்தல் சுதந்தரத்துடன் தொடர்பு பட்ட சம்பவங்களில் அதனைப் பாதுகாப்பதற்காக நீதிமன்றத்தில் அரசியலமைப்பின் உறுப்புரை 14(1)(அ) வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்ட சம்பவக் கற்கைகளும் காணப்படுகின்றன. 1993 ஆம் ஆண்டு அமரதுங்க எதிர் சிறிமால் மற்றும் ஏனையோர் (ஜன கோஷம் வழக்கு) இடம்பெற்ற வழக்கு அவ்வாறான உதாரணமொன்றாக அமைகின்றது. ஆர்ப்பாட்டம் ஒன்றில் மேளம் ஒன்றை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரை அதனை நிறுத்துமாறு பொலிசார் கூறினர், அதன் பின்னர் அவரது மேளத்தை உலக்கை ஒன்றை பயன்படுத்தி அடித்து நொறுக்கினர். ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்கும் நோக்கில் அவர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும்

[2] https://www.srilankalaw.lk/constitution-of-the-democratic-socialist-republic-of-sri-lanka.html
[3] hhttps://www.srilankalaw.lk/constitution-of-the-democratic-socialist-republic-of-sri-lanka.html

குண்டாந்தடி பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் இவ்விடயம் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் அமைதியான ஆர்ப்பாட்டத்தை தடுக்க வேண்டிய எந்தக் காரணமும் இல்லை எனவும் பொலிசாரின் நடவடிக்கை முறைப்பாட்டாளரின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான அடிப்படை உரிமையை மீறுவதாக அமைந்துள்ளது என வாதிடப்பட்டது. பின்வரும் விடயங்கள் அவ்வழக்கில் குறிப்பிடப்பட்டன:[4]:

> ‘‘அரசாங்கங்கள், அரசியல் கட்சிகள், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆதரிப்பது அல்லது விமர்சிப்பது ஜனநாயக வழியில் அமைந்த வாழ்வுக்கான அடிப்படையாக அமைகின்றது. மேலும், அனைத்து சிவில் மற்றும் அரசியல் அமைப்புகளின் அடித்தளமாக அமையும் சுதந்திரம் மற்றும் நீதியின் அடிப்படைக்கொள்கைகளை மீறாமல் ஒருவரின் பேச்சுச் சுதந்திரம் மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரம் என்பவற்றை மறுக்க முடியாது.’’

உறுப்புரை 14(1)(அ) இன் கீழ் மனுதாரர் கொண்டுள்ள உரிமை மீறப்பட்டது என நீதிமன்றம் சாதகமாகத் தீர்ப்பளித்தது, அரசியலமைப்பின் உறுப்புரை 4(ஈ) இன் கீழ் நீதிமன்றத்துக்கு விதிக்கப்பட்ட கடப்பாடு அடிப்படை உரிமைகளை மதிக்க, பாதுகாகக்க மற்றும் மேம்படுத்த அத்துடன் குடிமகனின் அடிப்படை உரிமையான பேச்சு மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரங்களுக்கு மதிப்பளிப்பதை உறுதி செய்ய பொலிசாருக்கு வழிகாட்டல்களை வழங்கவும் (பிரிவு 126(4) இன் கீழ்) அரசின் அதிகாரத்தை பயன்படுத்துவதை போதுமான அளவு நியாயப்படுத்தும் அதேவேளை மக்களின் அமைதியான போராட்டம் ஒடுக்கப்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டது. சுருக்கமாகக் கூறுவதாயின், வெளிப்படுத்தல் சுதந்திரம் மக்களின் ஒட்டுமொத்த நலன்களுடன் சமரசம் கொண்டதாக அமைய வேண்டும்[5].

வெறுப்புப் பேச்சு தொடர்பில், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்பாட்டொழுங்கின் (ICCPR) உறுப்புரை 20 பின்வருமாறு குறிப்பிடுகின்றது: ‘‘பாரபட்சத்தை, எதிர்ப்பு உணர்ச்சியை அல்லது வன்முறையை தூண்டும் தேசிய, இன அல்லது மத வெறுப்பு என்பன சட்டத்தினால் தடை செய்யப்பட வேண்டும்’’. ICCPR சட்டத்தின் பிரிவு 3 பின்வருமாறு குறிப்பிடுவதன் மூலம் இக்கூற்றினை மேலும் வலுப்படுத்துகின்றது: ‘‘ஆளெவரும் போரைப் பரப்புதலோ அல்லது பாரபட்சத்தை, எதிர்ப்பு உணர்ச்சியை அல்லது வெறுப்புப் பேச்சு மற்றும் வன்முறையைத் தூண்டுவதாக அமையும் தேசிய, இன, அல்லது மத ரீதியிலான பகைமையை ஆதரித்தலோ ஆகாது’’. ICCPR சட்டம் வெறுப்புப் பேச்சுக்கு எதிரான மிகவும் வினைத்திறன் மிக்க சட்டவாக்கமாகக் காணப்பட்ட போதும் இச்சட்டத்தின் கீழ் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்கு விசாரணைகள் அல்லது தீர்ப்புகள் எவற்றையும் காணக் கிடைக்கவில்லை[6].

குடியியல் மற்றும் சர்வதேச உரிமைகள் மீதான உடன்பாட்டொழுங்கு (ICCPR) சட்டத்தின் பிரிவு 3(1) பாரபட்சம், வன்முறை அல்லது எதிர்ப்பு உணர்வை தூண்டும் ஆதரித்து வாதிடல் அல்லது வெறுப்பைப் பரப்புதலை தடை செய்த போது, நியாயமான காரணங்கள் இன்றி சிறுபான்மை இனங்களின் உறுப்பினர்களை இலக்கு வைப்பதற்காக துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது[7].

1979 ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டம் (PTA) அரச அதிகார தரப்புகள் குறிப்பிட்டுக் கூறப்படாத ‘‘சட்டத்துக்கு முரணான நடவடிக்கைகளுக்காக’’ நபர்களை கைதுக்கான உத்தரவு இன்றி கைது செய்யவும் அவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்களை நீதிமன்றமொன்றில் முன்னிலைப்படுத்தாமல் 18 மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு தடுத்து வைக்கவும் அனுமதி வழங்குகின்றது.[8]. மிகவும் சர்ச்சைக்குரிய இந்த சட்டம் நாடளாவிய ரீதியில், விசேடமாக தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் போன்ற சிறுபான்மை இனங்கள் தொடர்பில், மனித உரிமைகளை மீறுவதற்கும் வெளிப்படுத்தல் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 40 வருடங்களுக்கு மேலாக, ‘‘பிழையான குற்ற ஒப்புதல்களை சித்திரவதையின் ஊடாக பெறப்படுவதையும்’’ சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் சிறுபான்மை இனங்கள்

---

[4] Amaratunga v. Sirimal and Others (Jana Ghosha Case) https://www.lawnet.gov.lk/wp-content/uploads/2016/11/029-SLLR-SLLR-1993-1-AMARATUNGA-v.-SIRIMAL-AND-OTHERS-JANA-GHOSHA-CASE.pdf

[5] https://www.lawnet.gov.lk/freedom-of-expression-and-right-to-information/

[6] Centre for Policy Alternatives (September, 2018) *Confronting Accountability for Hate Speech in Sri Lanka: A Critique of the Legal Framework*

[7] https://www.icj.org/sri-lank-de-radicalization-regulations-should-be-immediately-withdrawn/

[8] https://monitor.civicus.org/updates/2019/07/05/iccpr-act-and-judicial-system-being-misused-stifle-freedom-expression-sri-lanka/

இலக்கு வைக்கப்படுவதையும் இயலுமாக்கியுள்ளது[9]. மேலும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 14 தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளோர் விசாரணை தொடர்பில் வழங்கிய எந்த வாக்குமூலத்தையும் வெளியிடுவதைத் தடை செய்கின்றது. இது நேரடியான மனித உரிமை மீறலாக அமைவதுடன் விசாரணையின் புறவய நிலை மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றையும் தடுப்பதாக அமைந்துள்ளது[10]. ஜனவரி 2022 இல் 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாத தடைச் சட்டத்தின் (தற்காலிக ஏற்பாடுகள்) திருத்தச் சட்டமூலம் (''திருத்தச் சட்டமூலம்'') வெளியிடப்பட்டது. அதில் இந்தச் சட்டத்தினை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகத்தை குறைக்கு வகையில் அமைந்த குறிப்பிட்ட சில திருத்தங்கள் உள்ளடங்கியிருந்தன. தடுப்புக் காவல் காலத்தை 18 மாதங்களில் இருந்து 12 மாதங்களாகக் குறைத்தல் அதில் அடங்கியிருந்த திருத்தமொன்றாகும். எவ்வாறாயினும், எதேச்சையான தடுத்து வைத்தலில் இருந்து பாதுகாக்கப்படல் என்ற அடிப்படைச் சுதந்திரத்தை இன்னும் மீறும் சட்டமாகவே காணப்படுவதுடன் இச்சட்டத்தில் பயங்கரவாதம் என்பதற்கான தெளிவான வரைவிலக்கணம் ஒன்று வழங்கப்படவில்லை, இது மக்கள் கைது செய்யப்படுவதை இலகுவாக்குகின்றது[11].

கொவிட்-19 சூழமைவில், இலங்கை அரசாங்கம் மோசமாக வரையறுக்கப்பட்ட சட்டங்களின பரந்த பொருள் கோடல்களைப் பயன்படுத்தி மாற்றுக் கருத்து கொண்டவர்களின் வெளிப்படுத்தல் சுதந்திரங்களை மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. 2022 ஆம் ஆண்டின் ஏப்ரல் மற்றும் ஜுன் மாதங்களில், கொவிட்-19 நடைமுறைகள் தொடர்பான உத்தியோகபூர்வ நடைமுறைகள் பற்றி பிழையான அல்லது இழிவான கருத்துக்களை வெளியிடுவோர் கணணிக் குற்றங்கள் சட்டம் (CCA), பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் குற்றவியல் கோவை என்பவற்றைப் பயன்படுத்தி கைது செய்யப்படுவர் என அதிகார சபைகள் அறிவித்தன[12]. இது சுகாதார அமைச்சின் முன்னாள் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார போன்றவர்களை விசாரணை செய்யவும் தடுத்து வைக்கவும் காரணமாக அமைந்தது. தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில் கொவிட்-19 சோதனைக்கான செலவுகள் மற்றும் பெருந்தொற்று தொடர்பில் அரச அதிகாரிகளின் பதில் நடவடிக்கைகள் தொடர்பில் அவர் விமர்சனங்களை முன்வைத்ததன் காரணமாக அவருக்கு இந்நிலை ஏற்பட்டது[13].

1978 ஆம் ஆண்டின் அரசியலமைபில் தகவல் அறியும் உரிமை அடிப்படை உரிமையொன்றாக 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 19 வது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக உள்ளடக்கப்பட்டது. அதன் பின்னர் தகவலறியும் (RTI) சட்டம் 2016 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது[14]. மேலும், நல்லாட்சி, பொறுப்புக் கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் என்பவற்றின் திருப்பு முனையாக தகவலறியும் சட்டம் அமைந்தது. 2015 ஆம் ஆண்டு 19 வது திருத்தச் சட்டத்தின் மூலம் தகவலறியும் உரிமை அடிப்படைச் சுதந்திரங்களில் ஒன்றாக அறிமுகப்படுத்தப்பட்ட போதும், பத்திரிகைச் சுதந்திரம் உள்ளடங்கலாக வெளிப்படுத்தல் சுதந்திரம் என்பன் இந்தத் திருத்தத்தை அரசியலமைப்புக்கு அறிமுகப்படுத்துவதற்கான பிரதானமாக மற்றும் ஆரம்பத் தீர்மானமாகக் கருத்திற் கொள்ளப்படலாம். மேலும், பொதுமக்கள் பணத்தை அதிக அளவில் கையாளும் சுங்கம், உள்நாட்டு இறைவரி திணைக்களங்கள் போன்றவற்றின் செயற்பாடுகள் மற்றும் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் போன்ற விடயங்கள் அதிக வெளிப்படைத்தன்மையாக மேற்கொள்ளப்படுவதையும் எச்சரிக்கை ஒலி எழுப்பும் (Whistle-Blowing) செயற்பாடுகளையும் ஊக்குவிப்பனவாக அமைந்திருக்க வேண்டும். எவ்வாறாயினும், மாவட்ட மற்றும் நிருவாக மட்டங்களில் உள்ள அரச அமைப்புகள் தேசிய மட்டத்தில் உள்ள அரச அமைப்புகளை விட சிறப்பாக செயற்படுவதையும் தகவலறியும் சட்டத்தில் முன்யோசனை மிக்க வெளிப்படுத்தல் மற்றும் எச்சரிக்கை ஒலி எழுப்புவோருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் காணப்படுவதையும் நேர்மறையான விடயங்களாக இந்த ஆய்வு அடையாளம் காண்கின்றது.

அண்மையில் முன்மொழியப்பட்டுள்ள தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு (PDP) சட்ட மூலம் அதன் சர்ச்சைக்குரிய உள்ளடக்கங்கள் மற்றும் வெளிப்படுத்தல் சுதந்திரத்தை மீறியதாகக் காணப்படும் நிலை என்பவற்றுக்காக

---

9 https://www.hrw.org/report/2022/02/07/legal-black-hole/sri-lankas-failure-reform-prevention-terrorism-act

10 https://english.theleader.lk/news/1749-govt-commences-engagement-with-civil-society-on-pta-reforms

11 Human Rights Watch (2022) *"In a Legal Black Hole" – Sri Lanka's Failure to Reform the Prevention of Terrorism Act*

12 https://www.icj.org/sri-lanka-covid-19-restrictions-should-not-undermine-freedom-of-expression/

13 https://www.icj.org/sri-lanka-covid-19-restrictions-should-not-undermine-freedom-of-expression/

14 https://www.lawnet.gov.lk/freedom-of-expression-and-right-to-information/

அதன் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன[15]. இதன் சட்டமூல வரைபு ஜனவரி 2022 இல் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன்[16] தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாப்பதற்கான சட்டவாக்கங்கள் காணப்படுவது இலங்கையின் சட்டவாக்க முறைமையின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக அமைந்துள்ளது. மேலும், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மார்ச் 9, 2022 அன்று இடம்பெறும் என்பதை பாராளுமன்றம் மார்ச் 4, 2022 அன்று உறுதி செய்தது[17]. மேலும், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்ட மூலம் 2018 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள் (GDPR) சட்டத்தினை மாதிரி வடிவமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். எவ்வாறாயினும், தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டமூலமும் "தரவுப் பாதுகாப்பு அதிகார சபையின் சுயாதீனம், ஊடகவியல் நோக்கங்கள் உள்ளடக்கப்படாமை, அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் முறையீடுகளை மேற்கொள்ளும் தன்மை என்பன தொடர்பில் கடுமையான தண்டனைகள் மற்றும் கேள்விக்குட்படுத்தக் கூடிய வாசகங்கள்" என்பவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது[18]. இது ஊடக மற்றும் சிவில் உரிமைகள் அமைப்புகள் இடையே தீவிர கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளது.

இதனை முறியடிக்கும் நோக்கில் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டமூலத்தின் பிரிவு 35 பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கான ஏதேனும் விலக்களிப்பு, மட்டுப்பாடு அல்லது மதிப்புக்குறைப்பு, அத்தகைய விலக்களிப்புக்கு, மட்டுப்பாட்டுக்கு அல்லது மதிப்புக்குறைப்புக்கு ஏதேனும் சட்டத்தில ஏற்பாடு செய்யப்பட்டு, அடிப்படை உரிமைகளினதும் சுதந்திரங்களினதும் சாராம்சத்துக்கு மதிப்புக் கொடுப்பதுடன் ஆட்களின் உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும், குறிப்பாக பேச்சுச் சுதந்திரத்தையும் தகவலுக்கான உரிமையையும் பாதுகாக்க சனநாயக சமூகமொன்றில் அவசியமான மற்றும் விகிதாசாரப்படியான வழிமுறையொன்று அமைத்துருவாக்குமிடத்துத் தவிர, அனுமதிக்கப்படலாகாது[19]."

எவ்வாறாயினும், வெளிப்படுத்தல் சுதந்திரத்தின் மீது ஏதாவது மீறல் ஒன்று இடம்பெற்றுள்ளதா எனத் தீர்மானிப்பதில் கட்டுப்பாட்டாளர் அல்லது தரவுப் பாதுகாப்பு அதிகாரசபையின் வகிபாகம் ஜனநாயக விழுமியங்களை நிலைநிறுத்துவதில் அச்சுறுத்தல் ஒன்றைத் தோற்றுவிக்கின்றது. மேலும், GDPR சட்டத்தில் காணப்பட்ட பிரிவு 85 இனை தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு சட்டமூலத்தில் அகற்றியமை பின்வருமாறு கூறப்படுவதால் மேலும் கரிசனைகளை தோற்றுவித்துள்ளது: "கல்வி, கலை அல்லது இலக்கிய வெளிப்பாட்டின் நோக்கங்களுக்கு மேலதிகமாக வெளிப்படுத்தல் சுதந்திரத்தில் ஊடகவியல் நோக்கமும் உள்ளடக்கப்பட்டுள்ளது". எனவே தரவுப் பாதுகாப்பு சட்டமூலம் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பை ஏற்படுத்தும் அதேவேளை ஊடகவியல் நோக்கங்களுக்காக தரவுகள் தொடர் செயற்பாடாக்கத்துக்கு குந்தகம் ஏற்படுத்தப்படாமல் இருப்பதும் உறுதி செய்யப்பட வேண்டும். ஏனெனில், தரவுப் பாதுகாப்பு சட்டமூலம் மற்றும் தகவலறியும் சட்டம் ஆகிய இரண்டும் முரண்பாடற்ற விதத்தில் காணப்படுவதை உறுதி செய்வதற்கு அவசியமான சுயாதீன அதிகார சபைகள் அல்லது ஆணைக்குழுக்கள் எவையும் இங்கு ஏற்படுத்தப்படவில்லை. குறிப்பாக சமூக ஊடகங்கள் போன்ற ஊடகங்களை பயன்படுத்தி தகவல்களைப் பரப்புவதன் மூலம் ஊடகவியலாளர்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைக் கருத்திற் கொள்ளும் நிலையில், கணணிக் குற்றங்கள் சட்டத்தினைப் பயன்படுத்துவது போன்று இந்த சட்டமூலங்களைப் பயன்படுத்தியும் ஊடகவியலாளர்களை ஒடுக்க அரசாங்கம் முனைவது வெளிப்படுகின்றது.

பெருந்தொற்று காரணமாக இணையப் பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், இந்த நெருக்கடி மிக்க காலகட்டத்தில் புதிய ஊடகத்தைப் பயன்படுத்துவதில் வெளிப்படுத்தல் சுதந்திரத்துடன் இணைந்துள்ள வாய்ப்புகள் மற்றும் மட்டுப்பாடுகள் பற்றிய புரிதலைப் பெறுவது மிகவும் தொடர்புடைய விடயமாக மாறி வருகின்றது.

## இலங்கையில் புதிய ஊடகத்தின் தோற்ற வடிவம்

கடந்த தசாப்தத்தில் நாடளாவிய ரீதியில் இலங்கையின் பரந்த சனத்தொகை இணையத்துக்கான அணுகலைப் பெற்றுக் கொண்டதன் காரணத்தால் இந்நாட்டின் புதிய ஊடக புறத்தோற்ற வடிவம் பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளது. மேலும், இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் 2020 ஆண்டின் தொடக்கத்திலேயே உணரப்பட்டதால், வியாபரா நடவடிக்கைகளை இணையவழியாக மேற்கொள்ளல் மற்றும் கற்றல்

---

15 https://www.tisrilanka.org/wp-content/uploads/2021/07/TISL-Legislative-Brief_Personal-Data-Protection-Bill_13.07.2021.pdf

16 https://www.dailymirror.lk/print/front_page/Personal-Data-Protection-Bill-should-not-be-passed-in-haste-NMSJ/238-232729

17 https://www.parliament.lk/news-en/view/2477

18 https://www.dailymirror.lk/news-features/Personal-Data-Protection-Bill-Another-draconian-law-to-suppress-media-freedom/131-233442

19 https://www.icta.lk/icta-assets/uploads/2021/11/Data-Protection-Bill-Nov-2021.pdf

நடவடிக்கைகளுக்கு டிஜிட்டல் இயங்கு தளங்களைப் பயன்படுத்தல் என்பன பாரிய முக்கியத்துவத்தைப் பெற்றன.

படம் 1 இல் காண்பிக்கப்பட்டவாறு, இலங்கையின் பெரும்பான்மையான (64%) பயனர்கள் இணையத்தை தமது ஸ்மார்ட் போன் ரக கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தியே அணுகுகின்றனர். அதே வேளை, கணணி / மடிக்கணணிகளைப் பயன்படுத்தி இணையத்தை அணுகுவோரின் சதவீதம் குறைவானதாகவே (34.7%) காணப்படுகின்றது[20]. இலங்கையின் சனத்தொகையின் பெரும்பகுதி கையடக்க தொலைபேசிகளைப் பயன்படுத்தி இணையத்தை அணுகுவதில் அதிக திறன் மிக்கவர்களாகக் காணப்படுவது, அதிகமான இணையப் பயன்பாட்டாளர்கள் சமூக ஊடக இயங்குதளங்களை பயன்படுத்தும் சாத்தியத்தை குறித்துக் காட்டுகின்றது.


இலங்கையில் எந்த சமூக ஊடகங்களின் பயன்பாடு பிரதானமாகக் காணப்படுகின்றது என நோக்கும் வேளை, நாட்டில் உள்ள நான்கு முக்கிய சமூக ஊடகத் தளங்களையும் பயன்படுத்தும் பயனர்களின் எண்ணிக்கையை டேட்டா ரிப்போர்ட்டல் அமைப்பு (2021) சுட்டிக்காட்டுவதன் பிரகாரம் படம் 2 காண்பிக்கின்றது. உலகளாவிய போக்குகளைப் போன்றே இலங்கையிலும் அதிகம் பிரபல்யமான சமூக ஊடக இயங்குதளமாக முகநூல் காணப்படுகின்றது. 7 மில்லியன் பயனர்கள் முகநூலைப் பயன்படுத்துவதுடன் 3.8 மில்லியன் பயனர்களை அதன் மெசஞ்சர் வசதி மூலம் சென்றடைய முடிகின்றது. இன்ஸ்டாகிராம் மற்றும் லின்கட்இன் ஆகிய இரண்டும் இரண்டாவது அதிகம் பிரசித்தி பெற்ற சமூக ஊடகங்களாக இலங்கையில் காணப்படுவதுடன் அவற்றினை சராசரியாக 1.3 மில்லியன் பயனர்கள் பயன்படுத்துகின்றனர்.




படம் 8: இலங்கையில் வேறுபட்ட கருவிகளின் ஊடாக இணையத்தை அணுகுதல்

[20] https://datareportal.com/reports/digital-2021-sri-lanka

சர்வதேச பத்திரிகைச் சுதந்திர குறிகாட்டியியின் பத்திரிகைச் சுதந்திரம் அற்ற நாடுகளின் பட்டியலுக்குள் இலங்கை உள்ளடங்குவதுடன் பத்திரிகைச் சுதந்திரம் தொடர்பில் உலகின் 181 நாடுகளில் 127 வது இடத்தில் இலங்கை உள்ளது[21]. சர்வதேச ரீதியில் ஊடக நியமங்களை கணிப்பிடும் பிரீடம் ஹவுஸ் அமைப்பின் 2020 ஆம் ஆண்டின் அறிக்கைக்கு ஏற்ப, இலங்கையின் சர்வதேச பத்திரிகைச் சுதந்திர சுட்டெண் இறுதி 100 நாடுகளில் 56 ஆவது இடத்தில் உள்ளது. அரசியல் உரிமைகளை மீறும் 60 நாடுகளில் இலங்கை 33 வது இடத்தில் உள்ளது. எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின் சர்வதேச தர நியமங்கள் அறிக்கையின் பிரகாரம், இலங்கையின் ஊடகச் சுதந்திர சுட்டெண் 180 நாடுகளில் 127 ஆவது இடத்தில் உள்ளது. பிரீடம் ஹவுஸ் அமைப்பின் இணையச் சுதந்திர சுட்ணெ்ணில் 2021 ஆம் ஆண்டு இலங்கையினால் 50% புள்ளிகளை மாத்திரமே பெற முடிந்தது[22].




படம் 9: இலங்கையில் சமூக ஊடகங்களின் வகைக்கேற்ப பயனர்களின் எண்ணிக்கை

இலங்கையில் 2020 ஆம் ஆண்டு ஊடக சுதந்திரத்தை சீர்குலைத்த ஐம்பத்தி எட்டு பிரசித்தமான சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. அவற்றில் 13 அச்சுறுத்தல்கள், நான்கு மிரட்டல்கள், ஐந்து கைதுகள், ஐந்து அணுகலுக்கான மறுப்புக்கள், சைபர் தாக்குதல்கள், இணையத்தள் முடக்கல்கள் மற்றும் ஒலிபரப்பு இடைநிறுத்தம் என்பன உள்ளடங்குகின்றன. பொலிசார் மற்றும் பாதுகாப்பு படையினர் ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளை கண்காணிப்பது தொடர்வதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. சில செய்தி ஊடக நிறுவனங்கள் செய்திகளை வெளியிட/ஒளிபரப்ப முன்னர் குறித்த ஊடக நிறுவன உரிமையாளர்களின் அனுமதியை பெற வேண்டிய தேவைப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. செய்தி இணையத்தளங்களை பதிவு செய்வதற்கு பாதுகாப்பு படைகளின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற சட்டத்தை கொண்டுவருவதற்கான திட்டமொன்றும் தீட்டப்படுகின்றது[23]. பல ஊடக நிறுவனங்களின் செய்தி அறைகள் அரசியல் நிகழ்ச்சி நிரல் கொண்ட புள்ளிகளால் கட்டுப்படுத்தப்படுவது நிருபர்கள் முழுமையான சுயாதீனத்துடன் செயற்படுவதை சிரமமாக்குவதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. அதே போன்று பொதுமக்கள் மீது தாக்கங்களை செலுத்தும் குறிப்பிடத்தக்க அளவான செய்தி உள்ளடக்கங்கள் மட்டுப்படுத்தப்பட் அளவிலேயே மக்களை சென்றடைகின்றது. தவறான தகவல்கள், பிழையான தகவல்கள் மற்றும் போலிச் செய்திகளை பரப்பும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான அறிக்கையிடல்க்ள சமூக ஊடக மூலங்கள் மீதான நம்பகத்தன்மை குறித்த கேள்விகளை மக்கள் மத்தியில் எழுப்புகின்றன.

ஊடக சுதந்திரம் நசுக்கப்படுவதற்கான பல வழிகள் காணப்படுகின்றன. ஊடக நிறுவன உரிமையாளர்கள் மற்றும் பிரதம ஆசிரியர்கள் அனுமதி பெறப்படாத தலையீடு, ஊடக நிறுவன உரிமையாளர்களின் ஏனைய வர்த்தகங்களின் தலையீடு, அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள், அறிக்கையிடலைத் தடுத்தல், ஊடகவியலாளர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல், சமூக ஊடகங்களில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுக்களை பரப்புதல், ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்களை தடை செய்தல, இணையத்தை தடை செய்தல், ஊடக சுதந்திரத்தை நசுக்கும் சட்டங்களை அறிமுகம் செய்தல், நிறைவேற்று அதிகாரம் ஊடக சுதந்திரத்துக்கு எதிராக எடுக்கும் தீர்மானங்கள், தணிக்கை, கைதுகள், கேள்விகள் மூலமான விசாரணை, மூலத்தை கண்டறிவதற்காக மேற்கொள்ளப்படும் புலனாய்வு நடவடிக்கைகள் போன்றன இவ்வழிகளுக்கு உதாரணங்களாக அமைகின்றன. கடந்த ஒரு வருடத்தில் எமது நாட்டில் ஊடக சுதந்திரத்தை நசுக்குவதற்கு முறைசார் மற்றும் முறைசாரா வழிகளில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

21 https://freedomhouse.org/country/sri-lanka/freedom-world/2020
22 Free Media Movement (2021) *Media Freedom in Sri Lanka – Annual Report: Incidence & Trends*. (http://www.fmmsrilanka.lk/wp-content/uploads/2021/08/FMM_2021_Aug_Annual_Eng.pdf)
23 http://www.dailynews.lk/2018/08/08/local/159142/army-vigilant-over-social-media

## பரிந்துரைகள்

இந்த ஆய்வு பின்வரும் பரிந்துரைகளை முன்மொழிகின்றது:

***அடிமட்ட மக்கள் மற்றும் சமூகங்களின் குரல்கள் மாவட்ட மற்றும் கொள்கை மட்டங்களை சென்றடைவதற்கான வழிகளாக புதிய ஊடகங்கள்***

1. புதிய ஊடக இயங்குதளங்கள் (உதாரணமாக: இணையம், கையடக்க தொலைபேசிகள், மின்னஞ்சல்கள், சமூக வலையமைப்பாக்கங்கள், வலைப்பதிவு போன்றன) பற்றிய அறிவூட்டல் பொதுமக்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் இந்த இயங்குதளங்களை புரிந்து கொள்ளல் மற்றும் எவ்வாறு பொறுப்புடன் என்பன தொடர்பான விளக்கம் வழங்கப்பட வேண்டியதுடன் அவற்றில் தம்மை வெளிப்படுத்தும் வேளை அவர்கள் கொண்டுள்ள உரிமைகள் பற்றிய விழிப்பூட்டலும் வழங்கப்பட வேண்டும்.

2. இளம் வயதுகளில் ஊடக அறிவு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுதல் தலைமுறை மாற்றத்தை தூண்டுவதாக அமையும். மேலும், அடிமட்டத்தில் செயற்படும் செயற்பாட்டாளர்கள் சமூகத்தலைவர்களுக்கு நேர்மறையான சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு புதிய ஊடகம் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்ற அறிவு வழங்கப்படல் வேண்டும்.

3. பல்கலைக்கழகங்கள் மற்றும் ஊடக பயிற்சி நிறுவனங்களின் (SLPI, SLCJ, SLF, MTDC, போன்றன) ஊடகவியல், சமூகவியல் மற்றும் அரசியல் போன்ற கற்கை நெறிகளின் பாடத்திட்டங்களில் புதிய ஊடக தொழில்நுட்பங்கள் என்ற விடயம் உள்ளடக்கப்பட வேண்டும். விசேடமாக, வளர்ந்து வரும் தலைவர்கள் இலங்கையின் சூழமைவுக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்ட தகவல் பாய்ச்சல் பற்றிய அறிவு மிக்கவர்களாக உருவாக்கப்பட வேண்டும்.

***வேறுபட்ட அக்கறை கொண்டோர் புதிய ஊடக இயங்குதளங்களினால் எதிர்கொள்ளும் மட்டுப்பாடுகள் மற்றும் சவால்கள்***

1. வெளிப்படுத்தல் சுதந்திரத்தை மேம்படுத்தும் வகையில் தற்போது காணப்படும் சட்டவாக்கங்களின் ஏற்பாடுகள் வினைத்திறனுடன் அமுல்படுத்துவதை உறுதி செய்ய அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் தொடர்புடைய அதிகாரசபைகள் மற்றும் அதிகாரிகளை இலகுபடுத்தல்.
2. இணையம் மற்றும் இணையம் அல்லாத நிலைகளில் வெளிப்படுத்தல் சுதந்திரத்தை மற்றும் தகவல் உரிமைகளை நசுக்கும் வகையில் அமைந்த தீங்கான சட்டங்களை இரத்துச் செய்தல் / திருத்தி அமைத்தல்.
3. பொதுமக்கள் புதிய ஊடக இயங்குதளங்களில் தம்மை வெளிப்படுத்தும் வேளை மற்றும் பொறுப்பு மிக்க செய்திப்பரப்பலில் ஈடுபடும் வேளை அவர்கள் கொண்டுள்ள உரிமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவூட்டல்.
4. ஊடக நிறுவனங்கள் (உதாரணமாக, ஊடக இல்லங்கள், செய்திப்பத்திரிகைகள் போன்றன) அரசியல் பக்கச்சார்பு மற்றும் அரச கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கு தேவையான போதிய பொறிமுறைகளைக் கொண்டிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், அவை தமது பணியாளர்கள் (உதாரணமாக, ஊடகவியலாளர்கள் மற்றும் நிருபர்கள் போன்றோர்) தமது கருத்துக்களை சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தும் வேளை ஒழுக்கங்களை கடைப்பிடித்தல் அத்துடன் சமூக ரீதியாக பொறுப்புடன் செயற்படல் போன்ற விடயங்களில் அவர்களுக்கு பயிற்சியளிப்பதுடன் அவர்களை பாதுகாக்கவும் வேண்டும்.
5. பொறுப்பு மிக்க ஊடகவியலை மேம்படுத்தல் அத்துடன் அரசியல்வாதிகள், அரச பிரதிநிதிகள் மற்றும் ஏனைய அக்கறை கொண்டோரின் பொறுப்புக் கூறலை அதிகரிப்பதற்கு யதார்த்தங்களை சோதனை செய்யும் அமைப்புகள் மற்றும் ஊடகக் கண்காணிப்புக் குழுக்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

***இலங்கையின் புதிய ஊடகக் கலாச்சாரத்தில் கொவிட்-19 ஏற்படுத்தியுள்ள தாக்கம்***

இந்த ஆய்வில் ஏற்கனவே சுட்டிக்காட்டியவாறு, புதிய ஊடக வழிகளைப் பயன்படுத்தியே தாம் கொவிட்-19 தொடர்பான தகவல்களைப் பெறுவதாக 61.8% ஆன பதில் வழங்குனர்கள் தெரிவிக்கின்றனர். தடுப்பூசி தொடர்பான தகவல்கள் தொடக்கம் அரசாங்க மற்றும் சுகாதார வழிகாட்டல் வரை, விசேடமாக சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு போன்ற முக்கிய விவகாரங்களில் தகவல்களைப் பெறுவதில் சமூக ஊடகங்கள் மீது புதியதொரு நம்பிக்கை காண்பிக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது. பொதுமக்களுக்கான தகவல்களைப் பகிர்வதற்கு புதிய ஊடக வழிகள் எவ்வாறு அவசியமாகின்றன என்பதை இது எமக்குக் காண்பிக்கின்றது. எனவே, வெளிப்படுத்தல் சுதந்திரத்தை கருத்திற்கொள்ளும் வேளை, இந்த வழிகளைப் பயன்படுத்தி தமது கருத்துக்களை சுதந்திரமாக வெளியிட இந்த புதிய ஊடகங்கள் அனுமதிக்க வேண்டிய அதேவேளை தீங்கு

விளைவிக்கும் சாத்தியம் கொண்ட மற்றும் அபாயகரமான ''போலிச் செய்திகளை'' தடுக்க வேண்டிய அவசியமும் காணப்படுகின்றது.

2021 இல் இலங்கையின் அமைச்சரவை ''இணையத்தில் மேற்கொள்ளப்படும் பிழையான மற்றும் தவறாக வழிநடத்தும் கூற்றுக்களுக்கு'' எதிராகப் போரிடுவதற்கான ''போலிச் செய்தி'' சட்டமூல வரைபு முன்மொழிவு ஒன்றுக்கு அனுமதி வழங்கியது[24]. இந்த சட்டமூலம் சிங்கப்பூரின் இணையத்தில் மேற்கொள்ளப்படும் பிழைகள் மற்றும் திரிபுபடுத்தல் பாதுகாப்பு சட்டத்தை (POFMA) மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இச்சட்டம் அரசாங்கத்தின் பிரச்சாரத்தை மேற்கொள்ள மற்றும் பேச்சு சுதந்திரம் அத்துடன் ஊடக சுதந்திரங்களை கட்டுப்படுத்தும் கருவியாகப் பயன்படுத்தப்படலாம் என்ற சர்ச்சையை உருவாக்கியது. எனவே, இலங்கையில் உருவாக்கப்படும் எந்தவொரு ''போலிச் செய்தி'' சட்டமூலமும் மனித உரிமைகளை மீறாததாக அமைய வேண்டியதுடன் தனிநபர்கள் தம்மை சுதந்திரமாக வெளிப்படுத்துவதை அனுமதிக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டியது முக்கியமாகும். அதே வேளை, மனிதர்களின் ஆபத்தில் தள்ளி விடும் சாத்தியம் கொண்ட பிழையான தகவல்கள் பரப்பப்படுவதில் பாதுகாப்பு பெறப்படுவதை உறுதி செய்வற்கு போதிய அளவான பொறிமுறைகள் சட்டமூலத்தில் காணப்பட வேண்டும். முற்காலத்தில் செய்திகள் மற்றும் வாய்வழியாகக் கடத்தப்படும் தகவல்களைப் பற்றிக் கலந்துரையாட தனி நபர்கள் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதை வழமையாகக் கொண்டிருந்தனர். எவ்வாறாயினும், கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக ஏற்படுத்தப்பட்ட பௌதீக மட்டுப்பாடுகள் மற்றும் ஒன்று கூடல் தடைகள் காரணமாக அதிகமான தனி நபர்கள் தமது நோக்குகளை வெளிப்படுத்தவும் செய்திகளை ஏனையோருடன் கலந்துரையாடவும் புதிய ஊடக இயங்குதளங்களைத் தெரிவு செய்தனர். இது புதிய ஊடகத்துடனான பயனர் ஈடுபாட்டை பாரிய அளவில் அதிகரித்த அதே வேளை, இந்த முன்னேற்றம் மற்றும் இந்த புதிய ஊடகங்கள் கொண்டிருந்த பொறிமுறைகளும் உரிய வேகத்தில் அதிகரிக்கவில்லை. உரையாடலில் ஏற்பட்ட இந்த மாற்றத்தினை பேணுவதற்கு இந்நாட்டின் துரித டிஜிட்டல் நிலைமாற்றம் போதிய அளவான பொறிமுறைகளைக் கொண்டிராத நிலையைக் காண்பித்தது.

### *பயனர்கள் இடையே டிஜிட்டல் அடையாளங்களை உருவாக்குவதில் புதிய ஊடகத்தின் வகிபாகம்*

1) நாட்டில் வெளிப்படுத்தல் சுதந்திரத்தை மேம்படுத்தல் மற்றும் ஜனநாயகத்தை வலுப்படுத்தல் என்பவற்றை அடைந்து கொள்வதற்காக எவ்வாறு சமூக, அரசியல் மற்றும் கலாச்சார பிரச்சினைகளை டிஜிட்டல் ரீதியாக தீர்ப்பது என்பது தொடர்பில் பொது மக்களை இலக்கு வைத்து பயிற்சிப்பட்டறைகள் போன்ற பிரச்சார முன்னெடுப்புகளை விருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்தல்.
2) வாண்மை மிகு ஊடகவியலாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் மாத்திரமன்றி சாதாரண குடிமக்களும் வலைப்பதிவுகள் மற்றும் கருத்துக் குறிப்புகளை வழங்குவதை இணையத்தளங்கள் மற்றும் இணைய ஊடகங்கள் ஊக்குவித்தல்.
3) பயனர்கள் தமது டிஜிட்டல் அடையாளங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் முன்னேற்றகரமான மற்றும் இடையீடு மிக்க சூழல் ஒன்றை உருவாக்குவதற்காக பயனர்கள் வலையமைப்பாக்கத்தில் ஈடுபடவும், யோசனைகளை பகிர்ந்து கொள்ளவும் அத்துடன் தம்மை சுதந்திரமாக வெளிப்படுத்தவும் அதிக டிஜிட்டல் தளங்களை உருவாக்குதல்.

## *மேலதிக ஆய்வுக்கான விடயங்கள்*

இந்த தனித்துவம் மிக்க ஆய்வுடன் இணைந்திருந்த மட்டுப்பாடுகள் காரணமாக, ஆய்வின் போது மேலெழுந்த பல விடயங்களை இவ்வாய்வினால் ஆழமாக ஆராய முடியாமல் போனதுடன் அவற்றை ஆராய மேலதிக ஆய்வுகள் அவசியமாகின்றன. வெறுப்புப் பேச்சு தொடர்பில் இவ்வாய்வில் தொட்டுச் செல்லப்பட்ட போதும், இலங்கையின் புதிய ஊடகம் மற்றும் வெறுப்பு பேச்சு தொடர்பில் ஆராய தனித்துவம் மிக்க ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். வெறுப்புப் பேச்சின் வளர்ச்சி, தீவிரவாதக் குழுக்கள் புதிய ஊடகங்களை பயன்படுத்தி தமது சித்தாந்தங்களைப் பரப்புதல் மற்றும் ஆட்சேர்ப்பு என்பவற்றில் அதிக அளவில் ஈடுபடுதல் தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், இந்த ஆய்வு இலங்கையில் இளைஞர்கள் மற்றும் செல்வாக்கு செலுத்தும் குழு ஆகிய இரு தரப்பினரும் பயன்படுத்தும் வேறுபட்ட சமூக ஊடக இயங்கு தளங்களை அடையாளம் கண்டுள்ளது. எவ்வாறாயினும், மிகவும் முக்கியமான சமூக ஊடக இயங்கு தளங்களில் பதிவேற்றம் செய்யப்படும் உள்ளடக்கங்கள் பற்றிய ஆழமான ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. இது குறித்த செயலிகளைப் பயன்படுத்தும் பயனர்கள் உணரும் வெளிப்படுத்தல் சுதந்திரத்தின் அளவை சோதனை செய்ய உதவுவதுடன் இயங்கு தளத்துக்கு ஏற்ப அவர்களின் டிஜிட்டல் அடையாளங்கள் மிகவும் வெளிப்படுத்தல் மிக்கனவாக எவ்வாறு மாறுபடுகின்றன என்பதையும் நோக்க உதவும். மேலதிகமாக, சமூக

[24] https://ifex.org/sri-lanka-free-media-movement-said-fake-news-bill-could-undermine-freedom-of-expression/

ஊடகங்களில் இடம்பெறும் பணம் செலுத்திய ஊக்குவிப்பு மற்றும் விளம்பரப் பிரச்சாரங்கள் பணம் சம்பாதித்தல் என்பதன் வகிபாகத்தை ஆராய மேலதிக ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்களின் வர்த்தகமயமாக்கல் பகுதி பயனர்களின் வெளிப்படுத்தல் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதில் உறுதியான செல்வாக்கு செலுத்துவதுடன் சிலரின் நோக்குகள் ஏனையவர்களின் நோக்குகளை விட அதிகளவில் ஊக்குவிக்கப்படுவதையும் அவதானிக்கலாம்.